

# கடலில் கரைந்த காவியங்கள்

## வீரவணக்கம்






| | |
|---|---|
| கடற்கரும்புலி | கடற்கரும்புலி |
| மேஜர் நவநீதன் (இசையாளன்) | கப்டன் தோழன் (திருச்செல்வன்) |
| மரியநாயகம் ஜெயசீலன் | சுப்பிரமணியம் ராஜ்குமார் |
| 07.04.1978 - 10.03.1999 | 30.09.1979 - 10.03.1999 |
| எழுதுமட்டுவாள், கிளாலி, யாழ்ப்பாணம் | கள்ளப்பாடு , முல்லைத்தீவு |

10.03.1999 அன்று சர்வதேசக் கடற்பரப்பிலே இந்தியக் கடற்படைக் கலங்களால் சுற்றிவளைக்கப்பட்ட போது, ஏற்பட்ட மோதலின்போது கப்பலையும் தகர்த்து, தங்களையும் அழித்து வீரச்சாவினைத் தழுவிக்கொண்ட இம்மாவீரர்களுக்கு 20வது ஆண்டில் எமது வீரவணக்கத்தைச் செலுத்துகின்றோம்.





# கடலில் கரைந்த காவியங்கள்

அதிகாலை புலரும் வேளையிலே கடமையில் இருப்பவர்களைத் தவிர மற்றைய எல்லோரும் **செய்சின்** கப்பலிலே உறங்கிக் கொண்டிருந்தனர். கடந்த நாட்களில் மரியம்மா கப்பலுக்குத் தேவையான விநியோகப் பொருட்களை இறக்கிய வேலைகளின் காரணமாக எல்லோரும் களைத்துப் போயிருந்தனர். இயந்திரப் பகுதியிலும், மேலே காவற் கடமையில் இருப்பவரையும் தவிர மற்றைய எல்லோரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை **சேரா** மட்டும் இனிமேல் அடுத்த பாதுகாப்புத் தளத்திற்குச் செல்வதற்குரிய பாதைகளை வரைபடத்தில் கீறிக் கொண்டு இருந்த வேளை தாயகத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வருகின்றது. உடனே தொலைபேசியை எடுத்து **சேரா** கதைத்ததும் தாயகத்திலிருந்து விக்ரர் அந்த விடயத்தை கூறியதும் **சேராவின்** முகத்தில் அதிர்ச்சி தெரிந்தாலும் நிதானமாக **ரேடாரை** இயக்கிப் பார்த்த போது **விக்ரர்** கூறியது சரியென்று புரிந்துவிட்டது. அவர்களின் கப்பலிருந்து **11 கடல்மைல்கள்** தூரத்தில் இலக்கொன்று புலப்பட்டது. **விக்ரருக்கு** பதில் அனுப்பிய **சேரா** உடனே கப்பலில் உறங்கிக்கொண்டிருந்த அனைவருக்கும் எச்சரிக்கை அழைப்பு விடுத்தார். உடனே எல்லோரும் கப்பலின் மேல் தளத்திற்கு வந்து விட்டனர். அவர்களுக்கு **சேரா** நிலைமையை எடுத்துரைத்துச் செய்ய வேண்டிய பணிகளைப் பற்றி எல்லோருக்கும் அறிவுறுத்தினார்.

தேசியத் தலைவரின் சிந்தனைக்கு அமைவாக கடற்புலிகளின் சிறப்புத் தளபதி அவர்கள் கடலிலே எதிரியானவன் எங்கு கதைத்தாலும், அதை ஊடறுத்து ஒட்டுக்கேட்டு அத்தகவலை மொழிபெயர்த்துக் கூறும் வல்லமை மிக்க கடற்புலிகளை உருவாக்கியிருந்தார். அன்று அத்தகவலை மொழிபெயர்த்துக் கூறியவர் கடற்புலிகள் அணியின் பெண் போராளியொருவாராகும். உலக நாடுகளில் உள்ள கடற்படைகளை விட எமது கடற்படையானது மிகவும் திறமை மிக்கதாக வளர வேண்டும் என்பதில் சிறப்பத் தளபதி மிகவும் கண்ணும் கருத்துமாகப் பார்த்து வந்தார். விடுதலைப் புலிகளின் மகளிர் அணியின் பங்களிப்பானது உலகத்திலே எவராலும் மதிப்பிட முடியாதது. ஏனெனில் அவர்களின் அதீத வளர்ச்சியின் காரணமாக பாரிய சுடுகலன்களை இயக்குபவர்களாகவும், சிறந்த படகோட்டிகளாகவும், திறமை மிக்க கட்டளை அதிகாரிகளாகவும், செயற்பட்டதுடன் தாயக விடுதலைக்காக உயிரைத் துச்சமென மதித்து கடற்கரும்புலிகளாகவும் மாறியிருந்தனர். இதனால்தான் வேறு எந்தப் போராட்ட வரலாற்றுடனும் ஒப்பிட்டு பேச முடியாமல் தன்னிகரற்ற தனித்தன்மையாக எமது போராட்டத்தை எல்லோரும் உற்று நோக்கினர்.





கரையிலிருந்து இலங்கைக் கடற்படையின் கடற்கலங்கள் **செய்சின்** கப்பலை நோக்கி வந்து கொண்டிருப்பதை மிகுந்த எச்சரிக்கையுடன் **விக்ரர்** அறிவித்திருந்தார். இப்பொழுது பிரச்சினை வேறு. ஏனெனில் **செய்சின்** கப்பல் நிற்பதோ சர்வதேசக் கடற்பரப்பில் அதனால் கரையிலிருந்து உதவியை எதிர்பார்க்க முடியாது. உடனே **சேரா** சர்வதேசக் கட்டளைத் தளத்தின் பொறுப்பாளருக்குத் தொடர்பை ஏற்படுத்தினார். தொடர்பு கிடைத்து அவர் நிலைமைகளை கேட்டறிந்த பின் இந்நடவடிக்கையை மிகவும் அவதானமாகக் கையாளும்படி கூறினார். ஆனாலும் முடிவுகளை நீங்களே சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற் போல் எடுக்கவும் என பொறுப்பாளர் கூறியிருந்தார். **சேரா** தன்னுடன் இருந்த அனைவரையும் அழைத்து நிலைமையின் விபரீதத் தன்மையை விளக்கிக் கூறினார். எல்லோரும் தேசியத் தலைவரின் எண்ணத்திற்கு செயல்வடிவம் கொடுப்பவர்களல்லவா... அதனால் எமது விநியோகப் பாதையை அழிக்க நினைத்த எதிரியின் வேவுக் கலத்தை முதலில் அழிப்பது என எல்லோரும் முடிவெடுத்தனர். செய்சின் கப்பலானது அவ்வேவுக் கலத்தை நோக்கி நகரத் தொடங்கியது. தம்மை நோக்கி கப்பல் வருவதை உணர்ந்த வேவுக்கலமானது, வேறு பாதையில் நகரத் தொடங்கியது. பதற்றத்தில் வேவுக் கலமானது கரையை விட்டு உயரச் செல்வதை உணர்ந்து கொண்ட **சேரா** அக்கலத்தை தாக்குவதற்கு உரிய ஒழுங்குகளைச் செய்யுமாறு **பாண்டியன், நாவலன்** ஆகியோரிடம் கூறினார். அவர்களும் மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு முன் அணியப் பக்கமாகச் சென்று நிலையெடுத்து காத்திருந்தனர்.

ஆனால் இது இங்கே நடந்து கொண்டிருக்க **30 கடல்மைல்கள்** தூரத்தில் **மரியம்மா** எண்ணெய் தாங்கிக் கப்பலானது இரு வேவுக் கலங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையேற்பட்டது. மைக்கின் தலைமையில் அக்கலங்கள் இரண்டும் போராளிகளால் அழிக்கப்பட்டு, அவர்களிடமிருந்து பெறுமதி மிக்க தொழில்நுட்ப சாதனங்கள் உட்பட பல பொருட்களைத் தம் வசப்படுத்திக் கொண்டனர். **மரியம்மாவில்** பிரதான பொறியியலாளனாக **நவநீதன்** செயற்பட்டுக் கொண்டிருந்தார். கப்பலின் இரண்டாவது அதிகாரித் தரத்திலே **தோழன்** செயற்பட்டுக் கொண்டிருந்தார். **நவநீதனும்,** **சேராவும்** முன்னர் சிறிய விநியோகக் கலங்களைத் திருத்தும் வேலையில் ஈடுபட்டமையினால் இருவருக்குள்ளும் சிறந்த நட்பு இருந்ததை எல்லோரும் அறிவார்கள். வயதில் இளையவனாக இருந்தும், **நவநீதன்** தனது குடும்ப நிலைமையையும் யோசியாது தாயக விடுதலை என்னும் உன்னத பணிக்காக தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சிறந்த போராளியாகவே அவன் வலம் வந்தான். எப்பொழுதும் சிரித்த முகத்துடன் காணப்படும் அவனுக்குள்ளும் இருக்கும் வேதனைகளையும், தன் குடும்ப நிலையினையும் அவன் **சேராவிடம்** கூறியிருந்தான்.





அதனால் இருவருக்குள்ளும் சிறந்த நட்பு உருவாகியிருந்தது. சிறிய விநியோகக் கலத்திலிருந்து இருவரும் வெவ்வேறு கப்பல்களுக்கு மாறியபோது **சேரா** மிகவும் மகிழ்ச்சியடைந்தான். ஏனெனில் கப்பலின் பிரதான பொறியியலாளனாக **நவநீதன்** மாறியிருந்தான். **சேராவிடம் நவநீதன்** நின்ற காலத்தில் பொறுப்பாளரிடம் **சேரா நவநீதனின்** கடமையுணர்வுடன் செயற்படும் விதத்தினைப் பற்றி விரிவாக எடுத்துரைத்திருந்தார். கப்பலின் பிரதான பொறியியலாளராக கடமையேற்ற **நவநீதனை சேரா** வாழ்த்தி விடைபெற்றாலும் மீண்டும் மீண்டும் சந்தித்துக் கொள்ளும் போது இருவரும் சந்தோசமாக நீண்ட நேரம் கதைத்துக் கொண்டிருப்பார்கள்.

**செய்சின்** கப்பலானது வேவுக்கலத்தை அண்மித்ததும் **சேராவிடமிருந்து** அக்கலத்தை தாக்கும்படி கட்டளை வழங்கப்பட்டது. கடலிலே குறிபார்த்துச் சுடுவதில் கடற்புலிப் போராளிகளின் தேர்ச்சியினை எதிரியானவன் நன்கறிவான். இவர்களின் தாக்குதலினால் வேவுக்கலம் செயலிழந்து சுற்றிக் கொண்டிருந்தது. உடனே அக்கலத்தினை கப்பலுடன் அணைத்து அதனுள் இறங்கிப் பார்த்தபோது மிகவும் அதிர்ச்சியடைந்தனர். ஏனெனில் அத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் கடற்படையின் அதிகாரி தரத்திலான ஒருவரும் அங்கு இறந்து கிடந்தார். அவர் தனது படையதிகாரிகள் குழுவுடன் எடுத்த புகைப்படங்கள் உட்பட அவரது குறிப்புக்கள் அடங்கிய உடமைகளும், கைப்பற்றப்பட்டன. பல பெறுமதிமிக்க உபகரணங்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள் போன்றவை எடுக்கப்பட்ட பின்பு அச்சிறிய கடற்கலமானது எரியூட்டப்பட்ட பின்பு செய்சின்கப்பலானது தனது பயணத்தை மீண்டும் ஆரம்பித்தது. ஆனால் கரையிலிருந்து புறப்பட்ட கடற்படைக் கலங்கள் தம்மை நோக்கி வருவதை உணர்ந்து கொண்ட **சேரா** கப்பலை வணிகக் கப்பல்கள் செல்லும் பாதைக்குச் செலுத்துவதற்கு பாதையை மாற்றிக் கொண்டு, கப்பலின் வேகத்தையும் அதிகரித்தனர். கரையிலிருந்து வரும் கடற்படைக் கலங்கள் முதலில் சந்திக்கப் போவது அவர்களின் வேவுக்கலத்தினைத்தான். எரிந்த கலத்தின் எஞ்சிய பாகங்களையோ அல்லது சில வேளைகளில் அவர்கள் வரும்போது அவை முற்றாக நீரில் மூழ்கினால் அதனையும் காணாது ஏமாற்றமடைய நேரிடும். ஆனாலும் அவர்கள் **செய்சின்** கப்பலைத் துரத்திப் பிடிக்கத்தான் செய்வார்கள். அதனால் **சேரா** கப்பலை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் கப்பலில் இருந்த எல்லோரையும் அழைத்து சிலவேளைகளில் அவர்கள் நெருங்கி வந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கினார். ஆனாலும் அவர்கள் தப்புவதிலேயே குறியாய்ச் செயற்பட்டனர். வேகத்தைக் கூட்டி அவ்விடத்தில் இருந்த வணிகக்கப்பல்கள் செல்லும் பாதைக்குச் செலுத்திக் கொண்டிருந்த **சேராவுக்கு** தூரத்தில் றேடாரில் இரு வேறு இலக்குகள் தெரியத் தொடங்கியது. ஆம் அவை வணிகக் கப்பல்கள்தான் வந்து கொண்டிருக்கின்றன என்பது புரிந்து விட்டது. **சேராவுக்கு** இப்பொழுது சிறிது நிம்மதியாகவிருந்தாலும், **மரியம்மா** கப்பலைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர்.





ஏனெனில் **மரியம்மா** கப்பலானது வேகம் குறைந்ததாகும். அதனால் அவர்கள் இப்போது எங்கு நிற்கிறார்கள் என்பதை அறிவதில் **சேரா** செயற்படத் தொடங்கினார். தொலைபேசியில் தொடர்பை ஏற்படுத்த முனைந்தாலும் **மைக்கிடமிருந்து** பதில் வரவில்லை. ஆனாலும் தங்களின் நிலையினை பொறுப்பாளருக்குத் தெரியப்படுத்தினார். அவரும் **செய்சின்** கப்பலின் நிலைமையினை அறிந்து கொண்டதால் மைக்குடன் தொடர்பை ஏற்படுத்தி அவரின் நிலைமையினை அறிந்து கொள்ளவும் என **சேராவுக்குப்** பணித்தார். **செய்சின்** கப்பலானது பாதுகாப்பான இடத்திற்குள் நுழைந்துவிட்டது என்பதை தாயகத்தில் **விக்ரருக்கு** தெரியப்படுத்தத் தவறவில்லை. ஏனெனில் அவர்களது நிலையினை அறிந்து கொண்டால்தான் மேலதிக செய்திகளை **விக்ரர்** அங்கு தெரியப்படுத்த முடியும். நீண்ட நேரங்களின் பின்பு **மைக்கிடமிருந்து சேராவுக்கு** தொடர்பு கிடைக்கின்றது. இருவரும் மீண்டும் வேறொரு இடத்தில் சந்தித்துக் கொள்வதற்காக இடத்தினைத் தெரிவு செய்து கொண்டார்கள். இருவரும் அவ்விடத்தை நோக்கி நகரத் தொடங்கினர். அடுத்த நாளே இருவரும் சந்தித்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இருவரும் சந்தித்துக் கொண்டபோது அங்கு நடப்பவைகளை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது. இரு கப்பல்கள் ஒன்றாக அணைத்தால் எல்லோரும் மிகவும் மகிழ்வுடன் சேர்ந்து கதைத்துக் கொண்டும், நாட்டிலிருந்து கிடைத்த தகவல்களைப் பரிமாறியும் மிகவும் உணர்ச்சிகரமான சந்தோச நிலையில் காணப்படுவர். ஆம் எதிரிக்கு கனன்று தணல் போல் சண்டையிடும் போராளிகளுக்குள் இருக்கும் இளகிய மனதினை அவர்களுடன் பழகியவர்களுக்குத்தான் புரியும். வழமையில் சந்தித்துக் கொண்டால் உணவுகள் தயரிக்கப்பட்டு, உணவருந்திய பின்னரே பிரிந்து செல்வர். ஆனால் அன்று நிலைமை சீரற்றுக் காணப்பட்டதால் **சேராவும், மைக்கும்** கலந்தாலோசனை செய்தபின்னர் இருவரும் பாதுகாப்புத் தளத்திற்கு செல்வதற்கான பாதைகளை தெரிவு செய்த பின்னர் புறப்படத் தயாரானார்கள். அப்போது **சேரா நவநீதனை** சந்தித்து சுகம் விசாரித்த பின்னரே பயணம் ஆரம்பமாகியது. **மைக்கின் மரியம்மா** கப்பலானது வேகம் குறைந்தபடியால் பின்னே வர **செய்சின்** கப்பலானது முன்னே செல்லத் தொடங்கியது. ஆனால் இருவரும் பின்னர் பாதுகாப்பாக தளத்தினுள் சந்திப்பது என முடிவு செய்திருந்தனர்.

விநியோகப் பாதையினையும், கப்பல்களையும் கண்டறிவதற்காக அனுப்பப்பட்ட வேவுக்கலங்கள், விநியோகத்தின்போது தாயகத்திலிருந்து வந்தவர்களால் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டும், சர்வதேசக் கடற்பரப்பிற்குள் நுழைந்தவர்களை கப்பலில் இருந்தவர்களும் அழித்தமையினால், இலங்கைக் கடற்படையானது மிகவும் தர்மசங்கடமான ஒரு சூனிய நிலைக்குத் தள்ளப்பட்டது. அதனால் அவர்கள் வழமையான தந்திரவழியினைத் தேர்ந்தெடுத்தனர்.





அவர்கள் இந்தியக் கடற்படையிடம் உதவி கோரினர். எப்படிச் சொல்வது வேவுக்குச் சென்றவர்களைப் புலிகள் அழித்துவிட்டனர் என்று அதனால் தொழிலுக்குச் சென்ற மீனவர்களைப் புலிகள் அழித்துவிட்டனர் என்று பொய்யான தமது கபட நாடகத்தை அரங்கேற்றி உதவி கோரினர். இந்தியக் கடற்படையும் உடனே மூன்று கடற்படைக் கலங்களைத் தாக்குதலுக்கு அனுப்பியது. இது இவ்வாறிருக்க **செய்சின்** கப்பலானது அந்தமான் கடலினையும் தாண்டி வேறொரு தளத்திற்குள் சென்றுவிட்டது. இதனைச் **சேரா** பொறுப்பாளருக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

அடுத்த நாள் காலையில் பொறுப்பாளரிடமிருந்து இன்னோர் இடம் கொடுக்கப்பட்டு அதற்குச் செல்ல எவ்வளவு மணித்தியாலங்கள் எடுக்கும் என **சேராவிடம்** கேட்கப்பட்டது. அதற்கு உடனே **சேரா** பதிலை அனுப்பினார். சிறிது நேரத்தின் பின் பொறுப்பாளரிடமிருந்து பதில் வருகின்றது. அந்த இடத்திற்குச் சென்று அங்குள்ளவர்களைச் சந்திக்குமாறும் கூறப்பட்டது. அந்த இடத்திற்குச் செல்வதற்கு கப்பலைச் செலுத்திய **சேராவிற்கு** நாங்கள் வணிகக் கப்பல்கள் செல்லும் பாதையில் யாரைச் சந்திக்கப் போகின்றோம் எனத் தெரியவில்லை. என மனதில் நினைத்துக் கொண்டார். கப்பல் ஓடிக் கொண்டிருக்கின்றது. **சேரா** யோசித்தபடியோ கப்பலின் மேற்புறத்திலே வெளியே பார்த்தபடி நின்றார். **செய்சின்** கப்பலானது அந்தமான் கடற்பரப்பிற்கருகிலே பயணித்துக் கொண்டிருந்தபோது கடலில் மிதந்து செல்லும் பொருட்களைப் பார்த்ததும், ஏதோ விபரீதம் நடந்துள்ளது என்பதைக் கப்பலில் இருந்த அனைவரும் உணர்ந்து கொண்டனர். ஏனெனில் அங்கு மிதந்த பொருட்கள் அவர்கள் பாவனையில் இருந்த பொருட்களாகும். அவை எமது கப்பல்களில் இருக்கும் பொருட்கள் என்பதால் எல்லோரும் மிகவும் குழப்பமான நிலையில் காணப்பட்டனர்.

**மரியம்மா** கப்பலை மூன்று இந்தியக் கடற்படைக் கலங்கள் வழிமறித்து நின்ற வேளை **மைக்** நிலைமையின் தன்மையினைப் பொறுப்பாளருக்குத் தெரியப்படுத்தினர். மிகவும் இக்கட்டான நிலையில் இவர்கள் இருப்பதை உணர்ந்த பொறுப்பாளர் கப்பலில் இருப்போரின் விபரங்களைக் கேட்டுத் தெரிந்த பின் **மைக்கின்** அடுத்த நிலையிலுள்ள கடற்கரும்புலியான **தோழனையும்**, கப்பலின் பொறியியலாளராக இருந்த கடற்கரும்புலி **நவநீதனையும்** கப்பலில் தொடர்ந்து பயணிக்குமாறும், மிகுதிப் பேரைத் தப்புவதற்கு முயற்சி செய்யவும் எனவும் பணித்தார். கடந்த கால வரலாற்றிலே எமது மூத்த **தளபதி கிட்டண்ணாவையும்** உடன் வந்த போராளிகளையும் இந்திய வல்லரசின் நடவடிக்கையினால் தீயினில் எரிந்து காவியமான நினைவுகள் பொறுப்பாளரின் நினைவில் வந்து போயிருக்கும். அதனால்தான் அவ்வாறு ஒரு முடிவினை எடுத்திருக்கலாம்.







இரவு நேரமாகையால் இந்தியக் கடற்படையினர் **மரியம்மா** கப்பலை தமது கண்காணிப்பில் வைத்த வண்ணம் தொலைத்தொடர்பு சாதனம் மூலம் தொடர்பை ஏற்படுத்த முனைந்து கொண்டிருந்தனர். இடையிடையே வேட்டுக்களும் தீர்க்கப்பட்டுக் கொண்டிருந்தன. அந்த கண்ணிமைக்கும் நேரத்திற்குள் காற்றடைக்கப்பட்ட படகினில் சிறிய வெளியிணைப்பு இயந்திரத்தினைப் பூட்டி ஒரு **ஏ.கே** துப்பாக்கியுடனும், தொலைபேசியுடனும் எட்டு பேர் அவ்விடத்திலிருந்து இந்தியக் கடற்படையின் கண்களில் இருந்து மாயமாய் மறைந்து கொண்டிருந்தனர். அதற்குள் மிகவும் புத்தி சாதுர்யமாக **தோழனும், நவநீதனும்** கப்பலை இவர்கள் செல்லும் பாதைக்கு எதிராகச் செலுத்தியபடி, கடற்படைக் கலங்கள் மீது தாக்குதலைத் தொடுக்கத் தொடங்கினர். விடுதலைப் புலி என்றால் அது வீரத்தின் அடையாளம் என்பதை நிரூபித்தபடியே மூன்று கடற்படைக்கலங்களுடன் இருவர் மட்டுமே உள்ள நிலையில் தாக்குதல் நடத்தப்பட்டது என்பதை அறிந்திருந்தால் இந்தியக் கடற்படை வெட்கித் தலை குனிந்திருக்கும். இயக்க மரபிற்கிணங்க எமது கப்பலை எதிரிகளிடம் கிடைக்காமல் தாக்குதலைத் தொடர்ந்து, கப்பலையும் தகர்த்து தங்களையும் அழித்துக் கொண்ட கடற் காவிய நாயகர்கள், கடலோடு கலந்தாலும் என்றும் எம் நினைவில் எங்களுக்குள் வாழ்ந்து கொண்டுதான் இருப்பார்கள்.

பொறுப்பாளர் குறிப்பிட்ட இடத்திற்கு சில **கடல்மைல்** தூரங்களே இருப்பதால் **சேரா** பொறுப்பாளருக்குத் தொடர்பினை எடுத்தார். ஆனால் பொறுப்பாளரிடமிருந்து வந்த பதில் **சேராவை** மிகவும் குழப்பத்திற்குள்ளாக்கியது. ஏனெனில் அவ்விடத்தில் நின்றவர் **மைக்** என்றும் தற்போது அவருடைய தொடர்பு கிடைக்கவில்லை என்றும் பொறுப்பாளரிடமிருந்து பதில் வந்தது. தொலைபேசியைத் தொடர்ந்து செயற்பாட்டில் வைத்திருந்த வண்ணம் சேரா காத்திருக்கும் வேளையில் மைக்கின் தொலைபேசி இலக்கத்திற்கும் தொடர்பினை ஏற்படுத்தி முயற்சி செய்து பார்த்தார். ஆனால் பதில் கிடைக்கவில்லை. அவர் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருந்த வேளையில் திடீரென தொடர்பு கிடைக்கின்றது. ஆனால் அவர் கூறியவை சரியாகத் தெளிவில்லாமல் இருந்தாலும், அவர்கள் காற்றடைக்கப்பட்ட படகில் இருப்பது மட்டும் **சேராவுக்குப்** புரிந்து விட்டது. உடனே அவர்கள் குறிப்பிட்ட இடத்திற்குக் கப்பலைச் செலுத்துவதற்கு ஒழுங்குகளைச் செய்த பின், மீண்டும் **மைக்கின்** தொலைபேசிக்குத் தொடர்பினை ஏற்படுத்த முனைந்தார். ஆனால் ஏமாற்றமே மிஞ்சியது. ஆம் அவர்களின் தொலைபேசி முற்றிலும் செயலிழந்துவிட்டது. அவர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு வந்துவிட்டர்கள். ஆனால் அங்கு படகு எதுவும் தெரியவில்லை. கப்பலில் உள்ள அனைவரும் கப்பலின் மேற்பக்கத்திலும் முன் அணியப் பக்கமாக தொலைநோக்கிகளுடன் தேடிக் கொண்டிருந்தனர். **சேராவும், பாண்டியனும்** ரேடாரில் ஏதாவது இலக்குத் தெரிகிறதா எனப் பார்த்த வண்ணமே இருந்தனர்.








கடற்பயணங்களில் நாம் படிக்கும் படிப்பினை விட அனுபவ ரீதியாகச் செயற்பட்டு சில வேளைகளில் வேலைகளை இலகுவாக்க வேண்டும் என முன்னர் கப்பல்களுக்குப் பொறுப்பாக இருந்த **விஜய்** அவர்கள் கூறிய விடயம் **சேராவின்** மனதில் தோன்றியது. **பாண்டியனும், சேராவும்** கதைத்துக் கொண்டிருந்தபோது எல்லாப் போராளிகளும் அங்கு வந்து விட்டனர். எல்லோரிடமும் **சேரா "நாங்கள் இப்போது மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கின்றோம், ஏனெனில் இவ்வளவு தூரம் வந்துவிட்டு அவர்களை மீட்கவில்லையென்றால் வரலாற்றில் நாம் கறை படிந்தவர்களாகவே வாழ நேரீடும். எனவே நான் இப்போது எடுக்கும் முயற்சிக்கு எல்லோரும் உறுதுணையாகச் செயற்படுங்கள்''** எனக் கூறிவிட்டு அவர்கள் இறுதியாகத் தந்த இடத்திற்கு மீண்டும் கப்பலைச் செலுத்தி, அந்த இடம் வந்ததும் இயந்திரத்தினை நிறுத்தச் சொன்னார். அவ்விடத்திலே கப்பல் முற்றாகத் தனது செயற்பாட்டினை நிறுத்திக் கொண்டது. நேரமோ மாலையாகிவிட்டது, கப்பலிலிருந்து மிதப்புப் பொருட்கள் மிதக்கவிடப்பட்டன. நீர் அரைவாசி நிரப்பப்பட்ட கொள்கலன்கள் உட்பட கடலில் மிதக்க விடப்பட்ட பின், இரு மணித்தியாலங்களாக கப்பல் நீரோட்டத்திற்குச் செல்லும் பாதை, மிதப்புப் பொருட்கள் சென்ற பாதை, தூரம் என்பவை கணக்கிடப்பட்டு, மீண்டும் கப்பல் மெதுவாக நகரத் தொடங்கியது. அந்த நிமிடத் துளிகளைக் கப்பலிலிருந்த எவராலும் மறந்து விட முடியாது. ஏனெனில் நேரமோ மாலை தாண்டி இருள் பரவத் தொடங்கியிருந்தது. ஆனால் எல்லோர் மனதிலும் அவர்களைக் கண்டுபிடித்து விடுவோம் என்ற நம்பிக்கை மட்டும் மேலோங்கியிருந்தது.

ஆனாலும் எல்லோர் முகங்களிலும் இனம்புரியாத கலக்கமும் கலந்திருப்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. **சேராவும், பாண்டியனும்** தொடர்ச்சியாக இலக்குத் தெரிகின்றதா எனப் பார்த்த வண்ணமே இருந்தனர். இப்போது அவர்களைக் கண்டுபிடிக்காவிட்டால் பிறகு அவர்களைக் காண்பது முடியாத காரியமாகிவிடும். ஏனெனில் அவர்கள் முதலில் நின்ற இடமானது வணிகக் கப்பல்கள் செல்லும் பாதையில் அமைந்திருந்தது. இறுதியாக நின்ற இடம் வணிகக்கப்பல் பாதையை விட்டு விலத்தியிருந்தது. அவ்வழியில் குறிப்பிட்ட நெடுந்தூரத்திற்கு கப்பல்களின் நடமாட்டத்தையே காண முடியாது. இதனையும் நன்கு உணர்ந்த **சேரா** மிகவும் இறுகிய மனதுடன், றேடாரையே வெறித்து பார்த்தபடி ஒவ்வொரு தேடுதலுக்கும் ஏதாவது தெரிகிறதா எனப் பார்த்தபடியே இருந்தவரின் கண்களில் திடீரென ஒரு இலக்குத் தென்பட்டது. மீண்டும் மீண்டும் அதனைப் பார்த்து உறுதி செய்து கொண்டவர் அந்த இலக்கை நோக்கி வேகமாகக் கப்பலைச் செலுத்தினார்.எல்லாப் போராளிகளுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதால் எல்லோரும் கண்ணிமைக்கும் நேரத்தில் தயார் நிலையில் நின்றனர். தொலைநோக்குக் கருவியினால் பார்த்தபோது எமது காற்றடைத்த சிறிய படகு தெரிந்தது. மிக அருகில் வந்தவுடன் கப்பல் நிறுத்தப்பட்டது.





உடனே கப்பலை படகுடன் அணைப்பதற்கு முயற்சி செய்யப்பட்டு இப்போது கப்பலுடன் சிறிய படகு அணைக்கப்பட்டதும் அங்கே கண்ட காட்சி எல்லோர் மனதிலும் கவலையை வரவழைத்தது. ஏனெனில் சில போராளிகள் உடல் நலம் குன்றி அச்சிறிய படகில் சாய்ந்த வண்ணம் படுத்திருந்தனர். அப்படகில் இருந்து எல்லோரும் மேலே ஏற்றப்பட்டனர். மேலே வந்த **மைக் சேராவைக்** கட்டிப் பிடித்து "**நவநீதனையும், தோழனையும் நாங்கள் கொடுத்துவிட்டோமடா**" என்றதும் இருவரும் ஓவென்று அழத் தொடங்கிவிட்டனர். அங்கிருந்த எல்லோரும் தம் உற்ற தோழர்களின் தன்னலமற்ற தியாகத்தையும், தாய்நாட்டின் மீது கொண்ட பற்றையும் எண்ணி கண்ணீர் சிந்ததிய வண்ணம் காணப்பட்டனர். அவர்கள் அன்று அடைந்த வேதனையினை கடலன்னையும், காற்றும்தான் அறிந்திருக்கும். வெறும் வார்த்தைகளில் அவற்றை எழுதிவிட முடியாது.

சிறிது நேரத்தில் அவர்களுக்குரிய முதலுதவி வேலைகளை முடித்த பின்னர் அவர்கள் மீட்கப்பட்டதை பொறுப்பாளருக்குத் தெரியப்படுத்தினர்.அவரும் அவர்களுடன் கதைத்த பின் அடுத்து செய்ய வேண்டியவற்றைப் பற்றி அவர்களுக்குத் தெரியப்படுத்தினார். காற்றடைக்கப்பட்ட படகு, வெளியிணைப்பு இயந்திரம் ஆகியவற்றைக் கப்பலில் ஏற்றினர். மீண்டும் அடுத்த கட்ட விநியோகப் பணிக்காகத் தமக்கு வழங்கப்பட்ட அடுத்த தளத்தினை நோக்கி தமது பயணத்தினை ஆரம்பித்தனர்......

**இந்த வரலாற்றுக் காவியங்களை சாதாரண கண்கொண்டும், வெறும் வார்த்தைகளாலும் உணர்ந்து கொள்ள முடியாது.**

